**செய்தி வெளியீடு எண்:815** **நாள்:19.12.2007**

## அரசு செய்தி வெளியீடு

இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை 18–12–2007 அன்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்த போது முல்லைப் பெரியார் பிரச்சினை குறித்து தமிழக முதலமைச்சரும், கேரள முதலமைச்சரும் சந்தித்து பேச வேண்டுமென்று தெரிவித்த யோசனையின்படி, இன்று மாலை டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் மத்திய நீர்பாசனத் துறை அமைச்சர் திரு. சர்புதீன் ஜோஸ் அவர்கள் முன்னிலையில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களும், கேரள முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களும் சந்தித்து உரையாடினர். இந்தக் கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறை செயலாளர் மற்றும் அதிகாரிகளும், அது போலவே கேரள அரசின் சார்பில் பொதுப்பணித் துறை அமைச்சர், சட்டத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரி களும் கலந்து கொண்டனர்.

இரண்டு அரசுகளின் சார்பில் அவரவர் விளக்கங்களை எடுத்துக் கூறினர். கூட்டம் முடிந்த பிறகு, தமிழக அரசின் சார்பில் செய்தியாளர்களை சந்தித்த தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது :-

**துரைமுருக**ன் :- கேரள அரசின் சார்பில் அவர்களுடைய கருத்தை வலியுறுத்தினர். தமிழகத்தின் நிலைகளை நாங்கள் தெளிவு படுத்தினோம். சட்ட ரீதியான பிரச்சினைகளையும் எடுத்துக் கூறினோம். அவர்கள் தரப்பில் பேசும்போது, அணையில் அதிகமாக நீர்க் கசிவு உள்ளது. அதன் காரணமாக அணைக்கு பெரிய ஆபத்தை விளைவிக்கும். அதனால் மக்கள் பயப்படுகின்றனர் என்று சொன்னார்கள். மேலும் எந்த அளவிற்கு நீர்க்கசிவு காரணமாக தண்ணீர் போகிறது என்பதை எங்களுக்கு சரியாக கணக்கு காட்டுவதில்லை, எங்களை அளக்கவும் அனுமதிப்பதில்லை

என்றெல்லாம் கூறினர். அதற்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் கலைஞர் பதில் கூறும்போது ஒரு அணையில் அதிகமாக நீர்க்கசிவு இருந்தால் அது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று தான், எங்கள் தரப்பில் அணையில் நீர்க்கசிவு அதிகமாக இல்லை என்று கூறுகின்றனர், உங்கள் தரப்பில் நீர்க்கசிவு அதிகமாக இருப்பதாகவும், அது அணைக்கு ஆபத்து என்றும் சொல்கிறீர்கள். எனவே இரு தரப்பினருக்கும் பொதுவாக மத்திய அரசே இரு மாநிலத்தையும் சேராத பொறியியல் வல்லுநர்களைக் கொண்டு, மத்திய நீர் வள ஆணையத்தின் மூலமாக அணையில் எந்த அளவிற்கு நீர்க் கசிவு இருக்கிறது என்பதை கணக்கெடுத்து கூறட்டும் என்று தெரிவித்தார். அதற்கு தமிழ்நாட்டிற்கு ஆட்சேபணை இல்லை என்றும் சொன்னார். இதற்கு கேரள முதலமைச்சர் இது குறித்துப் பரிசீலிப்பதாகவும், அதிகாரிகளை கலந்து கொண்டு முடிவினை தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்.

கேள்வி :- புதிய அணை கட்டுவதைப் பற்றி பேசினார்களா ?

துரைமுருகன் :- புதிய அணை கட்டுவதைப் பற்றி சொன்னார்கள். அதற்கான பதிலை தமிழகத்தின் சார்பில் நாங்கள் கூறி யிருக்கிறோம்.

கேள்வி :- மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறுமா ?

துரைமுருகன் :- மீண்டும் பேச்சுவார்த்தை – இரண்டு முதல் அமைச்சர்களுக்கும் நேரம் கிடைக்கிற போது பேசலாம் என்று முடிவெடுக்கப் பட்டது. மத்திய அமைச்சர் அது பற்றி கேட்டபோது, தமிழகம் எந்த நேரத்திலும் அண்டை மாநிலங்களோடு நல்லுறவினை வளர்த்துக் கொள்ளும் என்றும், அண்டை மாநில மக்களின் நலனிலும் அக்கறை கொண்டது தான் எங்கள் அரசு என்றும் முதலமைச்சர் கலைஞர் தெரிவித்தார்.

*********

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**